**// கூடுதல் அறிவுரைகள்//** **// மின்னஞ்சல் மூலமாக //**

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை 06

**ந.க.எண். 026220/அ3/இ1/2025 நாள். 21.05.2025**

....

**பொருள் :** பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – அனைத்து வகை அலுவலகப் பணியாளர்களுக்கான மாறுதல் – 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல், விருப்ப மாறுதல் மற்றும் பதவி உயர்வு – கலந்தாய்வு நடத்துதல் தொடர்பாக – அறிவுரைகள் வழங்கியது – கூடுதல் அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை :**

1. அரசாணை எண். 151 பள்ளிக்கல்வி (SE1 (1) துறை நாள். 09.09.2022
2. அரசாணை எண். 149 பள்ளிக்கல்வி (SE5 (1) துறை நாள். 01.07.2024
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 026220/அ3/இ1/2025 நாள் 16.05.2025

........

அனைத்து அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில், ஒரே பதவியில் பணிபுரியும் கண்காணிப்பாளர்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்/ உதவியாளர் / இளநிலை உதவியாளர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், பதிவறை எழுத்தர். பதிவறை உதவியாளர் மற்றும் ஓட்டுநர் ஆகிய பதவிகளுக்கு வருவாய் மாவட்டத்திற்குள் Over 3 years மாறுதல், விருப்ப மாறுதல் மற்றும் மனமொத்த மாறுதல் ஆகியவற்றை நடத்துவது, அதன் பின்னர் முதன்மைக் கல்வி அலுவலர்களால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய அறிவுரைகள் / நெறிமுறைகள் ஆகியவை பார்வை (3) இல் காணும் செயல்முறைகளின்படி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, பின்வரும் கூடுதல் அறிவுரைகள் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

1. வருவாய் மாவட்டத்திற்குள் முதன்மைக் கல்வி அலுவலர்களால் நடத்தப்படவுள்ள Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் ஆகியவற்றிக்கு 31.05.2025 அன்று வரை வயது முதிர்வு ஓய்வு, விருப்ப ஓய்வு மற்றும் பிற காரணங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

2. விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலகப் பணியாளர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்படும் நாளில் ஓராண்டு பணி முடித்திருக்கவேண்டும். விருப்ப மாறுதலுக்கு விண்ணப்பிக்க ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இருந்து விலக்கு அளிக்கப்படவேண்டியவர்கள் குறித்து பார்வை (3) இல் காண் செயல்முறைகளில் பக்கம் 4 இல் குறிப்பிட்டுள்ள விலக்களிப்பு இனங்களை பரிசீலித்து விருப்ப மாறுதல் விண்ணப்பங்களை கலந்தாய்வுக்கு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

3. அலுவலகப் பணியாளர்கள் சார்பில் வருவாய் மாவட்டத்திற்குள் (சென்னை மாவட்டம், பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகம் நீங்கலாக) விருப்ப மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்களை 21.05.2025 க்குள் பெற்று முதன்மைக் கல்வி அலுவலரின் பரிசீலனைக்குப் பின்னர் விருப்ப மாறுதலுக்கான முன்னுரிமை பட்டியல் தயாரித்து கலந்தாய்வுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்களிடம் கையொப்பம் பெற்று மேல்முறையீடு ஏதும் பெறப்படின் அதனை சரி செய்து இறுதி முன்னுரிமை பட்டியல் வெளியிடப்பட்டு, கோப்பில் பராமரிக்கவேண்டும். **அவ்வாறு வெளியிடப்பட்ட முன்னுரிமைப் பட்டியலினை இவ்வியக்கத்திற்கு 23.05.2025 க்குள் மின்னஞ்சல் வாயிலாக அனுப்பிவைத்தல் வேண்டும்.**

4. சென்னை மாவட்டத்திலுள்ள அலுவலகங்கள் / பள்ளிகள் மற்றும் பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்திலுள்ள பிற

இயக்ககங்களில் உள்ள அலுவலகப் பணியாளர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரே அலுவலகத்தில் ஒரே பதவியில் பணிபுரிபவர்களின் பட்டியல் மற்றும் விருப்ப மாறுதல் கோரும் தகுதியுடைய நபர்களின் விண்ணப்பங்களை 22.05.2025 க்குள் பெற்று பரிசீலினைக்குப் பின்னர் சென்னை மாவட்டத்திலுள்ள முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகங்கள், வட்டாரக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அரசு உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகள் சார்பாக பட்டியல் மற்றும் விண்ணப்பங்களை **சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலராலும், பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்திலுள்ள பிற இயக்கங்களிலிருந்து பட்டியல் மற்றும் விருப்ப மாறுதல் கோரும் நபர்களின் விண்ணப்பங்களை நேரடியாக பள்ளிக் கல்வி இயக்ககத்திலும் 22.05.2025 க்குள் ஒப்படைக்கவேண்டும்.**

5. மனமொத்தமாறுதல் கோரும் நபர்கள் தற்போது பணிபுரியும் இடத்தில் ஓராண்டு பணி முடித்திருக்கவேண்டும். அந்நபர்களுக்கு இதற்கு முன்னர் பணியாற்றிய அலுவலகத்திற்கு (Previous Station) மனமொத்தமாறுதல் அளிக்கப்படக்கூடாது.

**6. மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் அ3 பிரிவு (மின்னஞ்சல் : a3sec.tndse@gmail.com)**

| பதவி | இவ்வியக்ககம் அனுப்ப வேண்டிய நாள் | அனுப்பிவைக்கவேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **கண்காணிப்பாளர்** | 26.05.2025 அன்று Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்தி முடித்த பின்னர், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்களை (**With relavent Enclosure**) முதன்மைக் கல்வி | 1.மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்கள்,<br><br>2. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வுக்கு பின்னர் உள்ள காலிப் பணியிட விவரம். |

| | | |
|---|---|---|
| | அலுவலர்கள் நன்கு கூர்ந்தாய்வு செய்து 27.05.2025 மாலைக்குள் Scan செய்து pdf கோப்பாக அனுப்பிவைக்கவேண்டும்.<br><br>(தகுதியான விண்ணப்பங்கள் இல்லையெனில் இன்மை அறிக்கை, மற்றும் கலம் 3 இல் கோரப்பட்டுள்ள பிற ஆவணங்கள், விவரங்கள் அனுப்பவேண்டும்) | 3. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வில் முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்ட ஆணை நகல். Abstract (பெயர் பட்டியலுடன்) |
| பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் | 30.05.2025 அன்று Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்தி முடித்த பின்னர், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்களை (**With relavent Enclosure**) முதன்மைக் கல்வி அலுவலர்கள் நன்கு கூர்ந்தாய்வு செய்து 31.05.2025 மாலைக்குள் Scan செய்து pdf கோப்பாக அனுப்பிவைக்கவேண்டும்.<br><br>(தகுதியான விண்ணப்பங்கள் இல்லையெனில் இன்மை அறிக்கை, மற்றும் கலம் 3 இல் கோரப்பட்டுள்ள பிற ஆவணங்கள், விவரங்கள் அனுப்பவேண்டும்) | 1.மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்கள்,<br><br>2. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வுக்கு பின்னர் உள்ள காலிப் பணியிட விவரம்.<br><br>3. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வில் முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்ட ஆணை நகல். Abstract (பெயர் பட்டியலுடன்) |

அ4 பிரிவு (மின்னஞ்சல் : cosea4sec@gmail.com)

| பதவி | இவ்வியக்ககம் அனுப்ப வேண்டிய நாள் | அனுப்பிவைக்கவேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| உதவியாளர் | 04.06.2025 அன்று Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்தி முடித்த பின்னர், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்களை (With relavent Enclosure) முதன்மைக் கல்வி அலுவலர்கள் நன்கு கூர்ந்தாய்வு செய்து 04.06.2025 மாலைக்குள் Scan செய்து pdf கோப்பாக அனுப்பிவைக்கவேண்டும். (தகுதியான விண்ணப்பங்கள் இல்லையெனில் இன்மை அறிக்கை, மற்றும் கலம் 3 இல் கோரப்பட்டுள்ள பிற ஆவணங்கள், விவரங்கள் அனுப்பவேண்டும்) | 1.மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்கள்,<br><br>2. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வுக்கு பின்னர் உள்ள காலிப் பணியிட விவரம்.<br><br>3. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வில் முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்ட ஆணை நகல். Abstract (பெயர் பட்டியலுடன்) |
| இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை – 3 | 09.06.2025 அன்று Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்தி முடித்த பின்னர், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்களை (With relavent Enclosure) முதன்மைக் கல்வி அலுவலர்கள் நன்கு | 1.மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்கள்,<br><br>2. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வுக்கு பின்னர் உள்ள காலிப் பணியிட விவரம்.<br><br>3. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப |

| | | |
|---|---|---|
| | கூர்ந்தாய்வு செய்து 09.06.2025 மாலைக்குள் Scan செய்து pdf கோப்பாக அனுப்பிவைக்கவேண்டும். (தகுதியான விண்ணப்பங்கள் இல்லையெனில் இன்மை அறிக்கை, மற்றும் கலம் 3 இல் கோரப்பட்டுள்ள பிற ஆவணங்கள், விவரங்கள் அனுப்பவேண்டும்) | மாறுதல் கலந்தாய்வில் முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்ட ஆணை நகல். Abstract (பெயர் பட்டியலுடன்) |

**அ5 பிரிவு (மின்னஞ்சல் :** a5sectndse@gmail.com)

| பதவி | இவ்வியக்ககம் அனுப்ப வேண்டிய நாள் | அனுப்பிவைக்கவேண்டிய ஆவணங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பதிவறை எழுத்தர், பதிவறை உதவியாளர், ஓட்டுநர். | 09.06.2025 அன்று Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்தி முடித்த பின்னர், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்களை **(With relavent Enclosure)** முதன்மைக் கல்வி அலுவலர்கள் நன்கு கூர்ந்தாய்வு செய்து 09.06.2025 மாலைக்குள் Scan செய்து pdf கோப்பாக அனுப்பிவைக்கவேண்டும். (தகுதியான விண்ணப்பங்கள் இல்லையெனில் இன்மை அறிக்கை, மற்றும் கலம் 3 இல் கோரப்பட்டுள்ள பிற ஆவணங்கள், விவரங்கள் அனுப்பவேண்டும்) | 1.மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் தகுதியுடைய விண்ணப்பங்கள்,<br><br>2. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வுக்கு பின்னர் உள்ள காலிப் பணியிட விவரம்.<br><br>3. Over 3 years கட்டாய மாறுதல் மற்றும் விருப்ப மாறுதல் கலந்தாய்வில் முதன்மைக் கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்ட ஆணை நகல். Abstract (பெயர் பட்டியலுடன்) |

**7. முறையான கண்காணிப்பாளர் பணி மாறுதல் கலந்தாய்வு : –**

15.03.2025 நிலவரப்படி பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவியிலிருந்து முறையான கண்காணிப்பாளராகப் பணி மாறுதல் அளிக்க தயார் செய்து இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண். 014964/அ3/இ1/2025, நாள். 05.05.2025 நாளிட்டவாறு வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலிலிருந்து (**ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளவர்கள் நீங்கலாக**) 01 முதல் 65 பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் 29.05.2025 பிற்பகல் நடைபெறவுள்ள கலந்தாய்வில் கலந்துகொள்ளத்தக்க வகையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர்கள் தகவல் தெரிவித்து 29.05.2025 அன்று பிற்பகல் 02.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலகம் வருவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

**8. பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வு கலந்தாய்வு : –**

15.03.2025 நிலவரப்படி உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு அளிக்க தயார் செய்து இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண். 026219/அ3/இ1/2025, நாள். .05.2025 நாளிட்டவாறு வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலிலிருந்து (**ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளவர்கள் நீங்கலாக**) 01 முதல் 90 உதவியாளர்கள் 03.06.2025 பிற்பகல் நடைபெறவுள்ள கலந்தாய்வில் கலந்துகொள்ளத்தக்க வகையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர்கள் தகவல் தெரிவித்து 03.06.2025 அன்று பிற்பகல் 02.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலகம் வருவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

**9. உதவியாளர் பதவி உயர்வு கலந்தாய்வு : –**

15.03.2025 நிலவரப்படி இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து உதவியாளராகப் பதவி உயர்வு அளிக்க தயார் செய்து இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண். 012828/அ4/இ3/2025, நாள்.02.05.2025 நாளிட்டவாறு வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலிலிருந்து (**ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளவர்கள் நீங்கலாக**) 01 முதல் 145 உதவியாளர்கள் 06.06.2025 பிற்பகல் நடைபெறவுள்ள கலந்தாய்வில் கலந்துகொள்ளத்தக்க வகையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு முதன்மைக்

கல்வி அலுவலர்கள் தகவல் தெரிவித்து 06.06.2025 அன்று பிற்பகல் 01.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலகம் வருவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

**மேலே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு பணி நிலையிலும், பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படும் பணியாளர்களின் முன்னுரிமைப்பட்டியல் வரிசை எண் அடிப்படையில், அவர்கள் 3 ஆண்டுக்கு மேற்பட்ட கட்டாய மாறுதல் பட்டியலில் இருப்பின் அவர்களுக்கு Over 3 years கட்டாய மாறுதலிலிருந்து விலக்களிக்காலம் என்று தெரிவிக்கப்படுகிறது.**

**அதேசமயம், மேற்கண்ட பணி நிலைகளில் (பணிமாறுதல் பணி நிலையினை தவிர்த்து) எவரேனும் பதவி உயர்வினை தற்காலிக உரிமைவிடல் செய்யும் பட்சத்தில் அவர்களை அதே அலுவலகத்தில் / பள்ளியில் பணிபுரிய அனுமதிக்கப்படாது. அவ்வாறான சூழ்நிலையில் மாவட்டத்தில் அப்போதைய நிலையில் உள்ள காலிப் பணியிடங்களில் ஏதேனும் ஒரு பணியிடத்திற்கு கட்டாய மாறுதல் அளிக்கப்படவேண்டும்.**

எனவே, பார்வை (2) இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகள், பார்வை (3) ல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளையும், மேற்கண்டவாறு தற்போது வழங்கப்படும் அறிவுரைகளைப் தவறாது பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமின்றி நன்முறையில் கலந்தாய்வினை செவ்வனே நடத்தி முடித்து **இவ்வியக்கத்திற்கு அனுப்பவேண்டிய விவரங்களை எவ்வித நினைவூட்டுக்கும் இடமின்றி அனுப்பிட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

21.5.2025

**இணைப்பு** : 1.மாறுதல் கோரும் மாதிரி படிவம்.
**(விருப்பம் மாவட்டத்திற்குள், மாவட்டம் விட்டு மாவட்டம்)**
2. Form -I and Form - II)

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் வழியாக),

**நகல் :**

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை 6
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம்,சென்னை 6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள்இயக்ககம்,சென்னை 6
5. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்பயிற்சிநிறுவனம், சென்னை 6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை 6
7. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், முதன்மை உடற்கல்விஆய்வாளர்அலுவலகம், சென்னை 6
8. இவ்வியக்கக அ2, அ4, அ5 பிரிவிற்கு
9. தகவல் பலகைக்கு

(1–7) தங்கள் அலுவலகப் பணியாளர்கள் சார்பான விவரம் விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பங்களை 22.05.2025 க்குள் இவ்வியக்கம் அனுப்பும் பொருட்டு பணிந்து அனுப்பலாகிறது.